# மார்க்சிய நோக்கில் பெண் பொருளாதாரம்

முனைவர் பீ. பெரியசாமி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்ஜிஆர் சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,
ஆரணி

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய காலகட்டத்தில் பெரிதும் பேசப்படும் பெண்ணியச் சிந்தனைகளையும், அவை தற்கால கவிதைகளில் இடம்பெற்றுள்ள நிலைகள் குறித்தும் மார்க்சியநோக்கில் ஆராய்தல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.இதன்வழி பெண் பொருளாதாரம் என்பதும் அதன் தேவையும் அதனை அடைய தேவையான வழிமுறைகளும் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.இக்கட்டுரையானது, மார்க்சிய நோக்கில் பெண்களின் பொருளாதார விடுதலையின் தேவை, பெண்களின் பொருளாதார தேவை, பெண்கள் பொருளாதார விடுதலை பெற வழிகள் எனும் தலைப்பினூடாக இவ்வாய்வை நிகழ்த்தவுள்ளது.

## முக்கியச் சொற்கள்

மார்க்சியம்,பெண்கள்,மார்க்சியப் பெண்ணியம், பெண்ணியச் சிந்தனை, பொருளாதாரவிடுதலையின் தேவை,பொருளாதார தேவை,பொருளாதார விடுதலை பெற வழிகள்

**முன்னுரை**

பெண்ணியம் தொடர்பாகபல்வேறு விளக்கங்களும், வரையறைகளும்,செயற்பாடுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில் பல்வேறு, இயக்கங்களும் துறைகளும் அதனை உள்வாங்கிக்கொண்டுள்ளன. அந்த வகையில்மார்க்சியமும் தன்பங்கிற்கு உள்வாங்கிச் செயல்படுகின்றது.இவ்வகையான பெண்ணியத்தை மார்க்சியம், தேசிய இனவாத அடிப்படையில் காணுகிறது எனக் கொள்ளலாம்.ஏனெனில் மார்க்சியம், முதலாளியத்துவத்தை எதிர்த்த வர்க்கப் போராட்டமாகவே தேசிய இனவாதத்தையும்ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது.சூழ்நிலை அடிப்படையில் தேசியவாதம்தேவை என்பதையும் ஏற்றுக்கொள்கிறது. உலக உழைப்பாளர் வர்க்கம் அனைத்துக்கும்விடுதலை கிடைத்து விட்டாலும், ஒரு தேசிய இனத்தில் இருந்து மற்றொருதேசிய இனம், சுதந்திரமாக. வாழ்தல் என்பது இயலாத காரியமாகவே உள்ளது. எனவே, ஒடுக்கப்பட்டஇனம் ஒன்று சேர்ந்து ஒரு தேசிய இனமாக உருவாகுதல் என்பது எப்படி தவிர்க்கஇயலாததோ.அதே போல வர்க்க விடுதலையாயிலும், ஆண் வர்க்கத்தால்ஒடுக்கப்படும் பெண்வர்க்கம் ஒன்று சேர்ந்து ஒரு இயக்கத்தைஉருவாக்கி விடுதலையடைய முயலுதல் என்பது தவிர்க்க இயலாததே.இந்த அடிப்படையில், மார்க்சியம், பெண்களையும் தொழிலாளர்களாகவே கருதுகிறது.மேலும்பெண்கள் அடிமைகளின் அடிமைகள் என்ற முறையில் மூன்றாம் தர தளத்திற்குத்தள்ளப்படுகிறார்கள் .இவ்வாறான சூழலில் பெண்ணியச் சிந்தனைகள் உருவாகிமார்க்சியப் பெண்ணியமாகத் தோற்றம் பெற்றது எனலாம்.

**மார்க்சிய நோக்கில் பெண்களின் பொருளாதார விடுதலையின் தேவை**

சமூகத்தில் மக்களின் வாழ்விற்கு அடித்தளமாக இருப்பது பொருளாதாரம். பொருளாதாரத்திலிருந்து விடுதலை பெறுதலே அனைத்திற்கும் அடிப்படையானது என்ற மார்க்சிய நோக்கில், பெண் வர்க்கமும், ஆண் வர்க்கத்தின்பிடியில் உள்ள பொருளாதாரத்திலிருந்து விடுதலை பெறுதலை முதன்மையானதாகக்கொள்கிறது. ஒரு பெண் பெருளாதார நிலையில் ஒரு ஆணைச் சார்ந்தே (நம்பியே)உள்ளதால், சுயமாகச் சிந்திக்கவும், முடிவெடுக்கவும், செயல்படவும் இயலாதநிலை உள்ளது. இந்நிலையில் பெண் ஆணுக்கான ஒரு உடைமைப் பொருள்,கூலியாள் அல்லது மறு உற்பத்தி செய்து தரும் சாதனம் என்றநிலையில் வைத்துநினைக்கப்படுகிறாள். எனவே ஆணைச் சார்ந்திருக்காத, தன்கையே தனக்குதவி என்றநிலையில் பொருளாதார நிறைவைப் பெண்கள் அடைய வேண்டும்.இவற்றின் மூலம், ஆண்களால் ஏற்படுத்தப்படும் அடிமைநிலையிலிருந்து விடுதலை பெறமுடியும் என்பதே பொருளாதார விடுதலை ஆகும் .பெண்களுக்குப் பொருளியல் விடுதலை மட்டுமே முன்னேற்றத்தைத்கொடுக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையும் போதுதான் பெண்சமுதாயம் முழுமையான விடுதலையைப் பெறமுடியும் என்ற "மார்க்சியப்பெண்ணியம்" பற்றிய சிந்தனையினைத் தேவமைந்தனின் கவிதை வரிகள்தெளிவாக வலியுறுத்துகின்றன.

**"பொருளியல் விடுதலைதான்**
**காலூன்றச் செய்யும்**
**தன் சொந்த வேர்களால்**
**இந்த மண்ணில் ஊடுருவி**
**நிற்பதுவே பேரின்பம்"[1]**

ஆண்களைச்சாராது பெண்கள் பொருளாதாரநிலையில் தனித்து செயல்படும் போதுதான் உண்மையானபேரின்பசுதந்திரத்தைப்பெற்றவர்களாவர்என்பதை "மரங்கள்தன்சொந்தவேரின்முலம்மண்ணைப் பற்றிவாழ்வதுபோல. வாழவேண்டும்அப்போதுதான்முன்னேற்றம்" என்றஉவமையின்வழிவெளிப்படுத்துகின்றார். முதலாளிவர்க்கத்தின்அடிமை வர்க்கம்தொழிலாளிவர்க்கம்,தொழிலாளிவர்க்கத்தின்அடிமை வர்க்கம்பெண்வர்க்கம் .எனவே,அடிமைகளின்அடிமைகளாய்இருக்கும்வரைபெண்விடுதலைஎன்பதுகானல் நீராகவேஇருக்கும் என்றசிந்தனையைவெளிப்படுத்தியுள்ளார்பாரதிவசந்தன். ***"முதலாளியின்அடிமையானவண்டியோட்டி, தனக்குக்கீழிருக்கும்மாட்டைஅடித்துவிரட்டுவதுஅவன்அவசரம்"என்பதன்மூலம், பெண்களைமாடுகளாகவைத்துக் காட்டிப்பொருளாதாரவிடுதலையைத்தூண்டச்செய்துள்ளன"[2]*** என்பதுபாரதிவசந்தன்கவிதைவரிகள். எனவேபெண்களுக்கானபொருளாதாரவிடுதலைகுறித்தசிந்தனைகள் தற்காலக்கவிஞர்களிடம் வெளிப்பட்டுள்ளமையைஅறியமுடிகிறது.

## மார்க்சிய நோக்கில் பெண்களின் பொருளாதாரவிடுதலையின்தேவை

***"இத்தகையபொருளாதாரவிடுதலையால் வரதட்சணைக்கேட்கும்மணமகனைநீதிமன்றம்வரைக் கொண்டுசென்றுநீதிக்கேட்டு, நிலையைமாற்றஇயலும்என்பதைக.தமிழமல்லனின் 'வெற்றிச்செல்வி!கதை தெளிவுபடுத்துகிறது"[3]***சமூகபொருளாதாரத்தில்நிறைவெய்தியபெண்ணாக, இக்கதையின் தலைவிவெற்றிச்செல்விஇருப்பதால்தான்நீதிமன்றம்வரைச்செல்லமுடிகிறதுஎன்பதும், நீதிகேட்டுவெற்றிபெற்றதும், மணமகனைவிலக்கிவிட்டுத்தன்சொந்தக்காலில்சமூகச்சீர்திருத்தப் பணிகளில் ஈடுபடமுடிகிறதுஎன்பதும் அறியவருகிறது. அதுமட்டுமன்றி,பெண்களுக்குஎதிராகசமூகத்தில்நிலவும்வரதட்சணைஉள்ளிட்டசமூக அவலங்கள் அனைத்தும்பெண்களால்தான்மாறும்என்பதைப்கதைத்தலைவியின்வாயிலாகவெளிப்படுத்துகின்றார். இதேபோன்றுபொருளாதாரத்தில்நிறைவுஎய்தியபெண்களால்தான் தேடிச்சென்றுமணமகனின்காலில்வரதட்சணையைக்

கொட்டிமணமுடித்து, வைக்கும்பெற்றோர்களின்அவலநிலையைப்போக்கஇயலும்என்கிறார்அ. உசேன்.தன் சொந்தகாலில்நிற்பதால்வரதட்சணையேஇல்லாதுமணமுடித்துக்கொள்வேன்என்றுசொல்லும்மணமகன்வரும்வரைக் காத்திருக்கமுடியும்என்பதுஅவரின்கருத்தாகஉள்ளது.

**"எத்துயர்தான்வந்தாலும்எக்காலம்போனாலும்.**
**மொத்திவரதட்சணைமொய்மை - எத்தியே**
**வந்தேமணப்பார்வரும்வரையில்காத்துமுயல்**
**'சிந்தைதனைத்தேடுகின்றேன்செப்பு"[4]**

என்கிறார்.எனவே, பொருளாதாரவிடுதலைபெறாமல், திருமணம்செய்துகொள்ளும்பெண்கள், ஆணின் அறிவுகட்டுப்பாட்டுக்குள்கட்டுப்பட்டவர்களாகவும், கட்டுப்படுத்தபட்டவர்களாகவுந்தான்இருக்கமுடியும். மேலும், ஆணின்துயரங்களைப் பொறுத்துக்கொண்டுவாழ்பவர்களாகவும், வழிதவறிச் சென்றஆட்டுக்குட்டியைப் போன்றவர்களாகவும், மட்டுமேவாழ்கிறார்கள்.இனிமேல்அவர்களால்சிந்திக்கமுடியாதுஎனத்திருமணம்ஆகியும் கணவனால்கைவிடப்பட்டு.வாழாவெட்டியாகஇருக்கின்ற, பெண்களின்நிலைகளைச்சுட்டிவிளக்கும்பாரதிவசந்தன்.

**"இந்தச்சமூகத்தில்**
**நீஎன்றைக்குமே**
**வாழாதஅல்லது**
**வாழமுடியாத**
**இன்னொருத்தன்மனைவி**
**என்கிறபெயரோடுதான்**
**காலம்பூராவும்"[5]**

என்றுஎச்சரிக்கிறார்.இவ்வாறுபொருளாதாரவிடுதலைஎன்பதுபெண்களுக்கு முக்கியதேவையாக உள்ளதுஎன்பதை இக்கவிதைகள்வெளிப்படுத்துகின்றன.இங்கு, ஆண்களால் வரதட்சணைஏன் கேட்கப்படுகிறது?என்றவினாவை.எழுப்பிவிடைகாணவேண்டியதுமுக்கியத்தும் பெறுகிறது.மேலும், பொருளாதாரநிறைவுஎய்தியவர்கள்பெண்களேபெரும்பாலும், வரதட்சணைகொடுப்பவர்களாகஇருக்கின்றனர் .அவ்வாறு வரதட்சணைஅளிக்க முடியாத நிலையில்முதிர்கன்னிகளாகவாழும்நிலைஏற்படுகிறது.இவற்றிற்கு எல்லாம் முதன்மைகாரணமாக இருப்பதுஆண்களால்புனையப்பட்டபண்பாட்டுக்கட்டமைப்பே ஆகும் .திருமணமாகியபெண்களும், கணவன்இறக்கப்பட்டசூழலில், மீண்டும்ஆணையேநம்பிமறுமணத்தைநாடுவதை நாடுவதை நாம் பார்க்கிறோம்.இதைத்தவிர்த்துத்தனித்துச்வாழ்வதற்கானசூழலானபொருளாதாரத்தைஜற்றத்தை அடையமுயலுதலேநன்மைபயக்கும்.ஏனெனில், மறுமணம்செய்துகொள்ளப்படும்ஆணினால்மீண்டும் கொடுமைகளேஅதிகளவில் நிகழ்கின்றனஎன்பதை,

**"உதவும், கைகள்**
**முள்... முள்ளாக**
**பாவம்கைம்பெண்"[6]**

என்கிறார்செந்தமிழினியன்.இது பெண்களின்பொருளாதாரவிடுதலையின்அவசியத்தைமேலும் உறுதிப்படுத்துகிறது.இன்றைக்குப்பெரிதும்நிகழ்த்தப்படும்பெண்சிசுக்கொலை, பெண்களின்

பொருளாதாரநிறைவின்மையையேகாட்டுகிறதுஎன்றுகூறுந்தமிழ்நெஞ்சன், *"அஃறிணையில்பெண்பிறந்தால் மகிழ்ச்சிகொள்ளுவதும், உயர்திணையில்பெண்பிறந்தால்வருத்தங்கொள்வதும்ஏன்? என்றவினாவின்மூலம் வெளிப்படுத்துகின்றார்"*[7].பெண்சிசுக்கொலை பெண்களுக்குச்சீர்கொடுத்துமணமுடித்துவைக்கஇயலாதபெற்றோர்களின் வறுமை நிலையின்காரணமாகவேநிகழ்கிறது.பெண்கள்ஆணுக்குவிலைபோதல் (விபச்சாரம்) போன்றஅடிமைச் செயல்பாடுகள்நிகழ்கின்றன.இவைபோன்றசிக்கலைத்தவிர்க்க, பெண்களுக்குப்பொருளாதாரநிறைவுஅவசியம் என்கிறார்கள்கவிஞர்கள்.மகளாக இருந்துதந்தையையும், மனைவியாகஇருந்துகணவனையும், தாயாக இருந்து தம்மக்களையும்நம்பியேவாழும்நிலை இன்றைய பெண்களின்சூழலாகஉள்ளது.எனவே, பெண் பிள்ளைகளின் பெற்றோர்கள், தம் பெண்குழந்தைகள் பொருளாதாரத்தில்நிறைவெய்தஉறுதுணையாகசெயல்படுபவர்களாகஇருக்கவேண்டும்.இல்லையேல்அவர்கள் திசைமாறிப்போய்விடுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளனஎன்பதை,

> **"பசித்தாய்பெற்றபிள்ளைகளாய்ப்**
> **பசித்ததால்வறுமைஇசையை**
> **வாசித்துவசித்துவந்தஎங்களை**
> **ருசிக்கநினைத்தக்கூட்டம்**
> **ருசித்ததால்.**
> **தாசிகளாய்த்தயாரானோம்"**[8]

என்றுவேதனைகொள்கிறார்பத்மபாரதி.பெண்கள்ஆண் ஆதிக்கவர்க்கத்தின்பிடியில்துன்பப்படுவதற்குக்காரணம் பொருளாதாரநிறைவெய்தாதநிலையேஎன்றுகுறிப்பிடுகின்றார்அர.சந்திரசேகரன்.

> **"ஆளுமையில்அடிமையினில்அன்புக்கேங்கும்.**
> **ஆசையினில்பெண்மக்கள்அடையும்பாடு**
> **கோலோச்சிதிரிகின்றபணத்தாலன்றோ**
> **கொடுமையினைத்தகர்த்திடவேஉறுதிகொள்வோம்"**[9]

இக்கவிதையில்அன்புக்கேங்கும்என்றமொழியாடல்பெண்களின் திருமணத்தோடுதொடர்புடையதாகவேஉள்ளது.'பணத்தாலன்றோ ' என்றமொழியாடல்ஆணாதிக்கப் பிடியிலுள்ளபணத்தால்பெண்கள் மிகவும்துன்பப்படுகிறார்கள் என்பதைவெளிப்படுத்துகிறது.இது *"உலகத்திலுள்ளசொத்துக்களில் 1 சதவீதம் மட்டுமேபெண்களுக்குரியதாகஉள்ளது"*[10]என்கிற க.பஞ்சாங்கத்தின்கருத்தோடுஒப்புநோக்கத்தக்கது. தானேசுயமாகச் சிந்திக்கவும், முடிவெடுக்கவும், தம் பொருளாதாரத்தேவைகளைப்பூர்த்திசெய்துகொள்ளவும்பெண்களுக்குப் பொருளாதாரவிடுதலைஎன்பது மிகவும் அவசியம்என்றுமார்க்சியப்பெண்ணியம்குறித்துநின்றாலும்கவிஞர்கள் பெரும்பாலும்பெண் மக்களுக்கான, திருமணம்தொடர்பானதேவைகளைக் கருதியேபொருளாதாரவிடுதலையின் அவசியங்களை வெளிப்படுத்தியுள்ளனர்

## மார்க்சிய நோக்கில் பெண்கள் பொருளாதாரவிடுதலைபெறவழிகள்

அபண்கள் பொருளாதாரவிடுதலையின்மூலமாக மட்டுமே, உண்மையானசுய விடுதலையைப் பெற்றஇன்பத்தைஅடையமுடியும்என்பதும், இதன்மூலம், வரதட்சணைக்கொடுமை, முதிர்கன்னிகளின்அவலம், பெண்

சிசுக்கொலை, விலைமாதரின்அவலம்என்பனவற்றைப்போக்கமுடியும்என்றபொருளாதாரவிடுதலையின்தேவையையும் எடுத்துரைக்கும்கவிதைகள், பெண்கள் விடுதலைபெறும்வழிகளையும்கூறுகின்றன. அவற்றைஇனிக்காணலாம்பிறரைச் சார்ந்துவாழ்வதேவாழ்க்கைஎன்றநிலை மாற்றப்பட்டாகவேண்டும்என்றுகூறுகிறார்தேவமைந்தன்.

**“பிறர்சார்ந்துவாழும்வரை**
**வாழ்க்கைக்குப்பொருளில்லை”**[11]

மேலும்பிறரின்முடிவையேஏற்று, அதனை ஆராயாமல் இயங்குதலைமாற்றவேண்டும்என்றும்கூறுகிறார்.

**“நமக்காகப்பிறர்முடிவை**
**எடுக்கும்மட்டும்**
**நம்கையில்நம்வாழ்க்கை**
**இருப்பதில்லை”**[12]

பெண்கள் கல்வியின்மூலமேதங்கள் வாழ்வில் மாற்றங்கள்நிகழ்த்தமுடியும்என்பதால்கல்விக்கு, முக்கியத்துவம்கொடுத்து, இவ்வுலகைப்பெண்களேதனித்து காணமுயலவேண்டும்என்றுவலியுறுத்துகிறார்.

**“கற்றகல்விநலம்வீசும்**
**விழிகளினால்உன்வாழ்வை**
**எதிர்நோக்கு"**[13]

பெண்கள்தங்கள் நிலைகளை நினைத்து அழுவதையும், புலம்புவதையும்தவிர்த்து வெற்றிகானப்பயனுள்ளவழியைத் தேர்ந்தெடுக்கமுயலவேண்டும்என்பதைப்

**“பெண்கள்அழுகைபெருமையைத்தாரா**
**எடுத்ததற்கெல்லாம்இரங்கியழுவதே**
**அடுத்ததென்றேஅணியாய்க்கொண்டே**
**வாழும்வாழ்க்கைவனிதையர்வாழ்க்கை”**[14]

என்றகவிதைவரிகள்மூலம்புதுவைநாகி விளக்குகிறார்.பெண்களேவிழிப்பெய்திஅனைத்துத்துறைகளிலும் பங்காற்றவேண்டும்.அப்பொழுதுதான்பெண்கள் தங்கள் பொருளாதாரவிடுதலையைப்பெறமுடியும்என்றுகூறுகிறார் பாவலர்இலக்கியன்.

**“எத்தனைநாள்இக்கொடுமைநீஅடைவாய்ப்பெண்ணே!**
**எரித்திடுவாய்கொடுமைகளைஇக்கணமேகண்ணே!**
**முத்தனையமுன்னேற்றம்ஏற்படவேமுழக்கு!**
**முனைந்துவந்துபலதுறையில்நீநிற்மதொழுக்கு”**[15]

மாதர்கள்கொத்தடிமைகளாய்இருக்கும்நாடுமுன்னேறாது.மாதர்களுக்குமுழுஉரிமைகளும்சமவாய்ப்புகளும் அளிக்கப்படுவதன்மூலமாகஇந்த நிலையைமாற்றஇயலும்என்றுஅனைவருக்கும்வழிகூறுகிறார்செவ்வேள்.

**“கொத்தடிமையாய்ப்பெண்கள்இருக்கும்நாட்டில்**

**குடியாட்சிகூட்டாட்சிஇருந்தால்என்ன**
**ஒத்தபடிபெண்ணுரிமைஇருந்தால்தானே**
**உள்ளபடிமுழுமையுறும்மக்களாட்சி!"[16]**

பெண்களுக்கானபொருளாதாரவிடுதலையினால்மக்களாட்சியும்முழுமைபெறும்என்பதையும்தெரிவிக்கிறார் .முக்கியமாக, அரசாங்கமேமுன்வந்துபெண்களுக்குஅரசு, அரசுஅலுவலகங்களில்வாய்ப்புகளைத்அதிகரித்துத் தரவேண்டும், என்பதை,

**“அரசாங்கம்முன்வந்துவேலைவாய்ப்பால்**
**ஆதரவுதரவேண்டும்பூவையர்க்கே"[17]**

என்கிறார்.இன்றைய சூழலில் பெண்களுக்கான 33 சதவிகிதஇடஒதுக்க்ட்டுத்திட்டத்தைநிறைவேற்றத்தூண்டுவதாக, தங்க. செயராமனின்கவிதைவரிகள்அமைந்துள்ளன.இத்தகையவிதிமுறைகளைப்பின்பற்றிப்பெண்கள் புரட்சிசிந்தனையால்பொருளாதாரவிடுதலையைப்பெற வேண்டும், பெண்கள்இனமேஇல்லாமல்ஆக்கும் பெண்சிசுகொலை, கருக்கலைப்புமுதலியவற்றைதடுப்பதையும்செய்ய வேண்டும். இதனைஅரிமதிதென்னகள்.

**“செய்வதைவிட்டுவிட்டுவோம்**
**சிசுக்களைக்கொன்றால்தீர்வை**
**எய்தலாம்என்றேபெண்கள்**
**இல்லாதநாட்டைக்காண**
**பொய்வழிகண்டுவிட்டோம்”[18]**

எனக்கூறிஆதங்கம்கொள்கிறார்.எனவேபெண்கள்புரட்சிசிந்தனையோடுகல்வியறிவுபெற்று, பலதுறைகளில் .பங்காற்றவும்தங்களுக்கானஉரிமைகளைஎடுத்துக்கொண்டுசெயல்படவும்உரிய முறையில் முயற்சி செய்ய வேண்டும் என்கிறார்கள்கவிஞர்கள்.

## முடிவுரை

காலம் காலமாக ஆண் வலிமையானவன் என்றும் பெண் வலிமையற்றவளாகவும் கற்பிக்கப்பட்டு வந்த கற்பிதங்கள் இருபதாம் நூற்றாண்டில் தகர்த்தெரியப்பட்டுவிட்டன என்றே சொல்லலாம்.அந்த அளவிற்கு எல்லா துறைகளிலும் இன்று பெண்கள் பணியாற்றி வருகின்றனர். இருப்பினும் சமவேலைக்கு சம ஊதியம், வேலை நேரம் என்பதெல்லாம் இன்றளவும் எட்டாக் கனியாகவே உள்ளது என்பதையெல்லாம் பார்க்கும்போது இன்னும் இந்த ஆணாதிக்கம் இருக்கத்தான் செய்கிறது என்பதை மறுக்கவியலா கசப்பான உண்மையே. இதனை கவிஞர்களின் கவிதைகளின்வழி இங்கே நிறுவப்பட்டுள்ளது.பொருளாதார அடிப்படையில் பெண் சுகந்திரம் என்பது வெறும் அவளுக்கான சுதந்திரம் மட்டுமே என கடந்துசெல்ல இயலாது.அது ஒரு சமூகத்திற்கான சுகந்திரம்.அவள் பொருளாதாரத்தில் சுகந்திரம் அடைந்தால் வீடும் நாடும் வளம் பெறும் என்பதையும் கவிஞர்களின் விதைகளின்வழி கண்டோம்.

## சான்றெண்விளக்கங்கள்

[1] போன்சாய்மனிதர்கள்,தேவமைந்தன், ப. 5, பதி.1993, அன்னை தெய்வானை பதிப்பகம், 8. பிள்ளையார் கோவில் வீதி, முத்தைய முதலியார் பேட்டை, புதுவை-1.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*
© 2023, IRJTSR

[2] தனிமரம்தோப்பாகும்,பாரதிவசந்தன்,பக். 34, 35, பதி.1994, வெளிச்சம் மக்கள் கலை இலக்கிய அமைப்பு,3/2, மடத்து வீதி, நெல்லித்தோப்பு, புதுச்சேரி-5.

[3] வெற்றிச்செல்வி,தமிழமல்லன் .க,ப.20, பதி.1996, தனித்தமிழ்ப் பதிப்பகம், 64. மாரியம்மன் கோயில் தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-9.

[4] பூக்கட்டும்புத்தொளிப்பூ,உசேன் .அ,ப. 78, பதி.1992, மீனா புத்தகப் பண்ணை, 7,வில்லியம் லே-அவுட், 2வது தெரு, கே.கே. ரோடு, விழுப்புரம்.

[5] தனிமரம்தோப்பாகும்,பாரதிவசந்தன்,ப. 29,, பதி.1994, வெளிச்சம் மக்கள் கலை இலக்கிய அமைப்பு,3/2, மடத்து வீதி, நெல்லித்தோப்பு, புதுச்சேரி-5.

[6] பரிதிப்புன்னகை,செந்தமிழினியன், ப. 29, பதி.1994, பரிதிப் பதிப்பகம்,43, மூன்றாம் குறுக்குத் தெரு, காந்தி நகர், புதுச்சேரி -9.

[7] தீயின்தாகம்,தமிழ்நெஞ்சன், ப. 45, பதி.1991, தமிழ்ச்செல்வி அச்சகம், கதிர்காமம், புதுச்சேரி-9.

[8] இளமைநதியில்முதுமைஓடங்கள்,பத்மபாரதி,ப. 9, பதி.1999, இராஜேஸ்வரி பதிப்பகம், பிள்ளையார் கோயில் தெரு, கடப்பேரிக்குப்பம் அஞ்சல், கரசூர்? புதுவை-502.

[9] சந்திரசேகரன் .அர, சிந்தனைக்குழவி, ப. 38, பதி.1997, எழில் பதிப்பகம், 69, வ.உ.சி. தெரு, சண்முகாபுரம், புதுவை-9.

[10] பெண்மொழிபுனைவு, பஞ்சாங்கம் .க,ப. 16, பதி.1999, காவியா பதிப்பகம், 16,17வது“இ“ குறுக்குத் தெரு, இந்திரா நகர் 2வது ஸ்டேஜ், பெங்களூர்-560 038.

[11] தேவமைந்தன், போன்சாய்மனிதர்கள், ப.5, பதி.1993, அன்னை தெய்வானை பதிப்பகம், 8. பிள்ளையார் கோவில் வீதி, முத்தைய முதலியார் பேட்டை, புதுவை-1.

[12] மேலது, ப. 5.

[13] மேலது, ப. 5.

[14] ஒருநாள்கூத்து, புதுவைநாகி ,பக். 25, 26, பதி.1992, கல்வி வெளியீடு, 57, வெங்கடாசலம் தெரு, இராயபுரம, சென்னை-13.

[15] இனியஉலகம்,பாவலர்இலக்கியன், ப. 36, பதி.1994, தமிழ் மகள் பதிப்பகம், 17, கடலூர் சாலை, புதுச்சேரி -1.

[16] நாடுவளம்பெற,செவ்வேள்,ப. 102, பதி.1998, செவ்வேள் பதிப்பகம், 89, பாரதிதாசன் தெரு, முத்தியால் பேட்டை, புதுச்சேரி -3.

[17] கவிதைப்பூங்கா,செயராமன் .தங்க, ப. 87, பதி.1992, ஜீவா பதிப்பகம், அன்பு இல்லம், 28, எழில் நகர், புதுச்சேரி -3.

[18] உளிகள், அரிமதிதென்னகன்,ப. 41, பதி.1995, சக்தி நிலையம், 7, வில்லியம் லே-அவுட், 2வது தெரு, கே.கே. ரோடு, விழுப்புரம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*